

வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் சிவபுராணம்

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே


1.வேதாத்திரியமும் சிவபுராணமும்
2.இறைநிலையில் எண்ணத்தை கலத்தல்.
3.உயிர் உயிரில் அறிவு லயமாக
4.ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
5.முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்
6.பொல்லா வினையேன்
7.எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
8.எஞ்ஞானம் இல்லாதேன்
9.அனைத்து உலகும் ஆக்குவாய்
10.வல்வினையேன் தன்னை
11.ஐந்து புலன்களையும் அடக்கலாம்
12.அன்பும் கருணையும்
13.பழக்கமே பற்றாக! பாசமாக!
14.நீராய் உருக்கி ஆருயிராய் நின்றானே
15.ஆதியனே அந்தம்
16.ஆற்றின்ப வெள்ளமே
17.அமுது நிறைந்த இறைவா
18.மாயையும் ஞானமும்
19.பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த


## 1.வேதாத்திரியமும் சிவபுராணமும்

மாணிக்கவாசகர் தமக்கும், இறைவனுக்கும் ஏற்பட்ட பிரிவை நீடிக்க விரும்பாமல் அழுது புலம்பிய புலம்பல்தானே திருவாசகம்.

இறைவனுக்கும் நமக்கும் பிரிவு ஏற்படாமல் இருப்பதற்கு இறையுணர்வு பெறுவது எப்படி?

இறையுணர்வு பெற தவவாழ்க்கையும் அறநெறியும் கொண்டு வாழ்வது எப்படி?

அகத்தவத்தையும் அறநெறியையும் அடைவது எப்படி?

இறைநிலையோடு இமைப்பொழுதும் ஒன்றியிருப்பது எப்படி? என்பதை விளக்கமாக போதனையாக மட்டுமல்லாமல் சாதனையாக பயிற்சியாக பாடதிட்டமாகத் தந்ததுதான் வேதாத்திரியம்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஓர் வாசகத்திற்கும் உருகார் என்று போற்றப்படும் சிறப்புப் பெற்ற திருவாசகம் சைவத் தமிழ் நூலின் முதற் பகுதியாகச் சிவபுராணம் அமைந்துள்ளது.

95 அடிகளைக் கொண்டு கலிவெண்பாப் பாடல் வடிவில் அமைந்துள்ள இது சைவர்களின் முதன்மைக் கடவுளான சிவபெருமானின் தோற்றத்தையும், இயல்புகளையும் விவரித்துப் போற்றுகிறது.

அத்துடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கான வழிமுறைகளையும் சைவசித்தாந்தத் தத்துவ நோக்கில் எடுத்துக் கூறுகின்றது.

உயிர்கள் இறைவனை அடைவதற்கான வழி முறைகளையும் சைவசித்தாந்தத் தத்துவ நோக்கில் எடுத்துக்கூறுகின்றது.

மிகவும் எளிய தமிழில் எழுதப்பட்டிருக்கும் இப் பாடலின் பெரும்பாலான பகுதிகள், ஆயிரத்து நூறு ஆண்டுகள் கழிந்து விட்டபின், தற்காலத்திலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவையாக உள்ளன.

முன் செய்த பாவ புண்ணியங்கள் அனைத்தும் தீர்வதற்காக உள்ளம் மகிழும் வகையில் சிவபுராணத்தைக் கூறுகிறேன் என்னும் பொருள்பட, சிவபுராணம் பாடியதன் காரணத்தை அதன் 19 ஆம், 20 ஆம் அடிகளில் விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர்.

சைவசித்தாந்தக் கொள்கைகளின்படி, உயிர்கள் செய்யும் நன்மை, தீமை ஆகிய இரு வினைகளும் அவை மீண்டும் மீண்டும் பிறப்பதற்குக் காரணமாக அமைவதுடன், உயிர்கள் இறைவனை அடைவதற்கும் தடையாக அமைகின்றன.

இதனாலேயே, *முந்தை வினைகள் அனைத்தும் ஓய* இறைவன் அருள் தேவை என்பதை எடுத்துக் கூறுகிறது சிவபுராணம்.

இதன் இறுதி அடிகளும், *அல்லல் நிறைந்த பிறவியை நீக்கும் வல்லமை பெற்ற திருவடிகளைப் பணிந்து சொல்லப்பட்ட இப்பாடலைப் பொருள் உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைவார்கள் என்று வலியுறுத்துகின்றன.*

சிவ புராணத்தில் கருத்துகளை எளிய விளக்கத்துடன் வேதாத்திரிய பார்வையில் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளது.

## 2.இறைநிலையில் எண்ணத்தை கலத்தல்.

திருவாசகத்திற்கும் வேதாத்திரியத்திற்கும் உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது மகா வாக்கியம்.

கல் நெஞ்சம் கொண்டாரையும் உருகச் செய்யும், நெகிழ்ந்து கரைய வைக்கும் பாக்கள் அவை.

இதற்குமேல் வேறொரு வாசகம் உண்டோ எனும் நிலையில் இறையனுபூதியை, ஞானத்தை, பரிதவிக்கும் பக்தியை பிசைந்து பிரம்மானுபவம் சொட்டச் சொட்ட ஊறும் தேன் பலா கொண்ட பாடல்கள் கொண்டவை.

திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் உணர வேண்டுமெனில் அது கூறும் அனுபூதியில் நிலைபெற வேண்டும்.

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க 5

- நமச்சிவாய வாழ்க. நாதன் திருவடி வாழ்க.
- கண்ணிமைக்கும் நேரமும் என் நெஞ்சம் பிரியாதவனுடைய திருவடி வாழ்க.
- திருவாடுதுறை ஆண்டருளும் குருவாகிய மாணிக்கத்தின் திருவடி வாழ்க.
- தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய திருவடி வாழ்க.
- ஒருவனாகியும் பலவுருக்கொண்டும் இருக்கும் இறைவனின் திருவடி வாழ்க.

“கண்ணிமைக்கும் நேரமும் என் நெஞ்சம் பிரியாதவனுடைய திருவடி வாழ்க.“ எனப் புகழ்கிறார் மாணிக்கவாசகர். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷிக்கு மிகவும் பிடித்தமான வரிகள்.

"இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விட்டு,
ஏற்படும் ஓர் அமைதியில் விழிப்பாய் நிற்க
நிறைநிலையே தானாக உணர்வதாகும்,
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்,
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்,
கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாகும்,
கரைந்துபோம் தன்முனைப்பு காணும் தெய்வம்” (ஞாக.பா.1487)

இவ்வளவு எளிமையாக விளக்கம் கூறி நம்மை செம்மை படுத்திவிட்டார் மகரிஷி.

எல்லா யோக மார்க்கங்களும் முயற்சியை மையமாக வைத்து தான். நாமும் எதுவரை முயச்சி செய்ய வேண்டும் என்றால், இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விடும் வரை முயற்சி செய்தால் போதும்.

இதில் நம்மை முழுமையாக உணர்வு ரீதியாக நம்முடைய உணர்வை அகன்ற நிலைக்கு கொண்டு போகப்போக ஒரு கட்டத்தில் தானாக விரிய முடியாமல், விரிந்து செல்வதற்கு இடமும் இல்லாமல் ஒரு நிலைக்கு மனம் வரும்.

அப்போது அந்நிலையில் ஒரு அமைதி நிலை ஏற்படும்.

அந்நிலையில் மனம் விழிப்போடு நின்றால் அமைதியில் மனம் உறைந்து காணாமல் போகும்.

அமைதி என்பது கற்பிப்பது அல்ல, கற்பிக்கப் படுவதும் அல்ல. உருவாக்குவதும் அல்ல, உருவாக்கப் படுவதும் அல்ல. தானாய் தானே நிலை பெறுவதே அமைதி நிலை.

இது தான் மௌன நிலையம் ஆகும். இந்த நிலையை வார்த்தையால் விளக்கிக் சொல்லவே முடியாது.

அப்படி சொன்னால், அது பொய் தான். இங்கு தான் ‘தியானம்’ என்று ஒன்று மலரவே ஆரம்பிக்கிறது.

இதற்க்கு முந்தைய நிலை வரை மனம் ஓர்மை படுவதற்கு ஒரு பயிற்சி முறை தானே தவிர, அவைகள் தியானமாக கருதுவது தவறு.

தியானம் என்பது ஒரு செயல் அல்ல. தானாக நிகழ்வது. ஏன் விழிப்பாய் நிற்க வேண்டும் என்றால், இங்கு கூட நம்முடைய கர்ம வினை நம்முடைய உணர்வு தளத்தை தாக்குவதற்கு தயாராக இருக்கும்.

நம்மை அங்கேயே தங்க வைப்பதற்கு தன்னுடைய முழு முயற்சியோடு செயல்படும்.

அதனால், விழிப்போடு இருப்போமேயானால், இங்கு என்ன இருக்கிறது? என்றால், முன்னால் உற்பத்தியான சுத்தவெளி என்ற நிலையைக் கடந்து, நம்மால் உருவான எண்ணமற்ற, சூன்யமான அரூபமான எங்கும் முடிவில்லாத, உணர்வு தளம் வரும்.

அதுதான் சுத்தவெளி உணர்வு. இந்த ஆகாய பெருவெளியில் வெறும் உணர்பவன் மற்றும் உணரப்படும் சூன்ய பெருவெளி மட்டுமே இருக்க முடியும்.

முதலில் நாம் உருவாக்கிய வெளி. பிறகு அதுவே நமக்குள் தானாக மலர்ந்த ஒரு விஷயம். இது தானாக சித்தியான ஒரு நிலை.

அமைதி வந்துவிட்டால் தேடுதல் நின்று விடும். தியானத்தின் மீதான ஈர்ப்பும், கவர்ச்சியும் விட்டு விலகிவிடும்.

இந்த இடத்தில் தான் நிறைய பேருக்கு குழப்பம் உண்டாகும் இடம்.

அதனால் இதன் அருகில் வந்தவுடனயே அது தான் சுத்தவெளி அனுபவம் என்று உறுதி செய்து கொண்டு அதில் இன்னும் ஆழ்ந்து போகாமல், அடுத்த அடுத்த மார்க்கங்களை நோக்கி நகர ஆரமித்து விடுகிறார்கள்.

இந்த இடத்திற்கு வந்துவிட்டோமானால் சர்வ கல்பத்தை நெருங்கி விட்டோம் என்று பொருள். இந்நிலையில் நாம் இன்னும் ஆழ்ந்து நம்மை இழக்க தயாராகிவிட்டால் சர்விகல்ப நிலை.

இந்த உணர்வை உணர்வது யார்? எது? உடலா? இல்லை மனமா? உயிரா? தெரியாது.

ஆனால் உணர்வு மட்டும் இருக்கும். ஆக, நம்மால் உணரப்படும் அந்த எல்லையற்ற மௌனம், தெய்வீக வெளி, இந்நிலையில் தான் “நிறைநிலை” என்ற அடுத்த கட்டம் நிகழும்.

இந்த வார்த்தைகள் எல்லாம் மகரிஷி யோசித்து எழுதவில்லை. அது (இறை) அவராக தன்னை வெளிப்படுத்தி வந்தவைகள் தான். இது தான் தற்செயல் இயக்கம்.

ஏனெனில், மகரிஷி என்ற ஒரு தனி மனிதன் அங்கு இல்லை. செயல் மட்டுமே இருக்கிறது, செய்பவன் இல்லாமல் இருக்கிறது. இது தான் “நிறைநிலையே தானாக உணர்வதாகும்”.

உணரப்படும் காணாமல் போய்விட்டது. உணர்பவனும் காணாமல் போய்விட்டான்.

அதனால் தான் “நரன் என்ற சிற்றறிவை நான் கடந்த போது நான் நீயாய் கூர்தலறம் வந்தியல்பு அறிந்தேன்” என்று கூறுகிறார் மகரிஷி.

ஆக, இயல்பில் அறிவதற்கு ஒன்றுமே இல்லை. நான் உருவாகினதும் போய்விட்டது.

என்னுள் உருவானதும் போய்விட்டது. நான் நானாகவே நிற்கிறேன். அனால், பழைய நான் இல்லை. கவனித்த நான் காணாமல் போய்விட்டேன். அப்போ இருப்பது என்னவென்றால் அது தான் “தான்” (தானாய், சுயமாய்,

# 3. உயிர் உயிரில் அறிவு லயமாக

பக்தி நெறிப் பனுவலாகிய திருவாசகத்திலும் ஞான நெறிப் பனுவலாகிய வேதாத்திரியத்திலும், அறிவுக் கூறுகள் மாணிக்கக் கற்கள் போல் ஒளிந்து கொண்டிருப்பதால்,

காதன்மை நெறியாகிய சன்மார்க்கத்தில் ஒழுகிய மாணிக்கவாசகருக்கும் வேதாத்திரி மகரிஷிக்கும், சீலம். நோன்பு, செறிவு, அறிவு என்னும் நான்கனுள் ஒன்றான அறிவு நெறியையும் உரிமையாக்கி மகிழ்ந்தனர் சான்றோர்கள்.

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெ ய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க 10

- என்னுடைய வேகத்தைப் போக்கி ஆண்டுகொண்ட மன்னனின் திருவடி வெல்லட்டும்.
- பிறப்பினை நீக்குபவனாகிய தலைக்கோலமுடைய பெருமான் அணி சேர் கழல்கள் வெல்லட்டும்.

- தன்னை விடுத்து நிற்பவர்களுக்கு வெகு தூரத்தில் உள்ள (அரிய பொருளாக உள்ள) பெருமானின் பூப்போன்ற மென்மையான கழல்கள் வெல்லட்டும்.
- கைகளைக் கூப்பி வழிபடுவார் உள்ளத்தில் மகிழ்ந்து இருக்கும் மன்னனுடைய கழல்கள் வெல்லட்டும்.
- தலை தாழ்ந்து வணங்குவார்களை மிக உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம் வாய்ந்தவனுடைய கழல்கள் வெல்லட்டும்.

"உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம்" பெறுவதற்கு உயிர்லயமாகும் அகத்தவம் வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

"புலனளவில் அன்னமயம் பிராணமய கோசப்
  போக்கினிலே மயக்கினிலே மயக்குற்றுச் செயலாற்றி வாழும்
சலன நிலை உடையோர்கள் தங்கள் மனம் ஒன்ற,
  சார்பொருள் உருவம்ஒலி இரண்டிலொன்று வேண்டும்.
பலனறிந்து செயலாற்றும் பண்பு பெற்றோர்கட்குப்
  பரத்தி  னலே உயிர் உயிரில் அறிவு லயமாக,
நலனறிந்த பேரறிஞர் அக நோக்கி நின்று,
  ஞானப் பேறடைந்த வழி உள்ளுணர்வுத் தவமே!" (ஞாக.பா.1475)

உடல் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் அறிவு செயல்படுவது அன்னமய கோசமாகும்.

அன்னமய கோசத்தில் பழகிக் கொண்டதை மீண்டும் மீண்டும் செயலாற்றும் நிலை மனோமய கோசம்.

கோசம் என்றால் அடுக்கு அல்லது உறை எனப்படும்.

அறிவினின் இயக்க நிலைகளே அன்னமய, மனோமய கோசம் ஆகும்.

மனதின் இயக்கத்திற்குக் காரணமான உயிரையும் உயர்ந்த நிலை பிராணமய கோசம் ஆகும்.

அறிவில் தெளிவு பெறாதவர்களும், சிறார்களும், தங்களது அறிவின் தரத்திற்கேற்ப செயல்படுவது மயக்கநிலை.  மாணா மன நிலையையாகும்.

அத்தகைய மன சலன மயமுடையவர்களின் செயல்களின் விளைவு துன்பமாகிறது.

அப்படிப்பட்டவர்கள் துன்பமில்லாமல் வாழ்வதற்கு, மன ஒருமைப்பாடு அவசியமாகிறது.

அதற்கு ஏதாவது ஒரு உருவத்தை அல்லது மந்திர ஓசை ஆகிய இரண்டில் ஒன்றை ஆதரவாக நம்பியிருக்க வெண்டும்.

ஆனால் விளைவைக் கணித்துக் கொண்டு செயலாற்றுபவர்களுக்கு, மனதை, உயிரில் ஒடுக்கி, மனதின் அடித்தளமாக உள்ள அறிவில் லயமாகும் போது, நலமான வாழ்வு கிட்டும்.

இந்த உண்மைகளை உணர்ந்த அறிஞர் பெருமக்கள் அகநோக்கு தவத்தின் மூலம் மனதை உயிரில் ஒடுக்கி, அறிவில் அடக்கி, உள்ளுணர்வாக அனைத்தையும் அறிந்து ஞானப்பேறு அடைந்துள்ளார்கள்.

உயிரில் அறிவின் லயமே உள்ளுணர்வ தவத்திற்கான வழியாகும். இததவத்தின் மூலம் உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம் நமக்கு இயல்பாகவே அமைந்துவிடும். வாழ்க வளமுடன்.

## 4. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் ஓதுதல் மூலம் நாளும் நமது நெஞ்சத்தைத் திருத்துவோம். நம் வசப்படுத்துவோம்.

இறைவன் புகழ் பாடிப் பரவுவோம். தொண்டு செய்வோம். நம்மை இறைநிலையாக்கி ஆட்கொண்டருளும் அம் மகான்களது திருவடித் தாமரைகள் போற்றி, அறிவு தந்து ஆட்கொண்டிருளிய அற்புதத்தைப் போற்றுவோம்.

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி 15
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

- எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டவனின் திருவடி போற்றி.
- எம் தந்தை என நின்று அருளுபவனின் திருவடி போற்றி. ஒளி வடிவானவனின் திருவடி போற்றி.
- சிவன் எனப்பெறும் செம்பொருளின் சிவந்த திருவடி போற்றி.
- அன்பினில் நிற்பவனான தூயவனின் திருவடி போற்றி.
- மாயப் பிறப்பினை நீக்கும் உயர்ந்தோனின் திருவடி போற்றி.

- அமைப்பு சிறந்து விளங்கும் திருப்பெருந்துறையில் இருக்கும் நம் தேவனின் திருவடி போற்றி.

"ஆராத இன்பம் அருளும் மலை போற்றி" என்கிறது திருவாசகம். இறைநிலை இன்பம் என்கிறது வேதாத்திரியம்.

## இறையுணர்வில் எழும் பேரின்பம்

"இன்ப ஊற்று என நிறைந்த இறைவா" எனும் போதிலே
 ஏற்படும் ஓர் இன்பமதை எவ்வாறு சொல்வேன்?
நன்மை தரும் நவகோள்கள், நட்சத்திரக் கூட்டம்,
 நான் அகத்தே காணுகின்றேன் நடமாடும் காட்சியாய்!
உன் பெரிய, பேரியக்க, உவமையற்ற ஆற்றலால்,
 உலகங்கள் அத்தனையும் உருளுதே ஓர் கொத்துபோல்!
தனமயமாய்த் தான் அதுவாய்த் தவறிடாதியக்கும் உன்
 தன்மையினை எண்ண எண்ண, தவமது ஆனந்தமே" (ஞாக.பா.1652)

பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்து எல்லா இயக்கங்களையும் திருவிளையாடலாக நிகழ்த்திக் கொண்டிருக்கும் வியத்தகு மறைபொருள் காந்தம்.

அந்தக் காந்தத்திற்கும் உட்பொருளாக இருப்பு நிலையாக அமர்ந்து, காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற ஆறு விளைவுகளாகி- -

உயிர்களுக்கெல்லாம் வாழ்க்கை இன்பத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் உன்னை "இன்ப ஊற்று என நிறைந்த இறைவா" என்னும்போது ஏற்படுகிற எனது இன்பப் பெருக்கை எவ்வாறு வார்த்தைகளால் சொல்வேன்?

விண் துகள்களின் கூட்டாக பஞ்சபூதங்கள் இருந்தாலும், விண், வெளி என்ற இரண்டின் விகிதாசாரக் கூட்டுக்கேற்ப ஒவ்வொரு பௌதீகப் பிரிவும் காந்த அலையின் தன்மையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப காந்தத் தன்மாற்றத்தின் அளவும் விளைவுகளும் ஒவ்வொரு பௌதீகப் பிரிவிற்கும் வேறுபடுகிறது.

இதற்கு பௌதீகப் பிரவுகளைக் கூட்டாகப் பெற்று, சூரியனைச் சுற்றி இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது கோள்களும் நில உலகில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு எல்லாம் வாழ்வின் இன்பத்திற்கு வேண்டிய அலைகளை ஓயாமல் வீசி நன்மை அளிக்கின்றன.

இந்த ஒன்பது கோள்களையும் நட்சத்திரங்களாக சூரியன்களாகக் காண்கின்றபோது எனது உள்ளம் அவைகள் எல்லாம் நியதி தவறாமல் ஆடும் நடனக்காட்சியைப் போன்று உவப்பை அளிக்கிறது.

இறைவா நீயே உனது துண்டுபட்ட பகுதி நிலையில், பேரியக்க மண்டலத்தில் இயங்கும் பொருட்கள் எல்லாமாக இருப்பதால், உனது தன்மை அனைத்தும் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ளதால் நீயே எல்லாவற்றையும் நியதி தவறாமல் இயக்கி வருகிறாய்.

இந்தஉண்மைகளை உணர்ந்து, அதில் லயமாகின்ற மனநிலையே எனக்கு உயர்ந்த தவமாக அமைகின்றது.

## 5. முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்

நம் வேதங்களில் "கர்மா" என்ற சொல்லுக்கு நாம் செய்யும் "செயல்" என்பது பொதுவான பொருளாகும்.

ஒவ்வொரு செயலுக்கும் எதிர் செயல் உலகத்தில் உண்டு. இதனை நியூட்டனின் மூன்றாம் விதிப்படி ஆங்கிலத்தில் "To Every Action There is an Equal and Opposite Reaction" என்று சொல்வார்கள்.

நம் நம்பிக்கைகளிலும் நாம் செய்த வினைகளைக் குறிக்க கர்மா என்ற சொல் பயன்படுத்தபடுகிறது.

கர்மவினை என்றும் வினைப்பயன் என்றும் நாம் புழக்கத்தில் சொல்வது இந்த நியூட்டனின் மூன்றாம் விதியைத்தான்.
"ஒருவன் எப்படி செயல்படுகிறானோ அவனும் அதைப்போலவே ஆகின்றான்"

யஜுர் வேதம்: பிரகதாரண்ய உபநிஷத் (4.4.5)

கர்மா என்பது ஒருவனுக்கு இறைவனால் எழுதப்பட்ட தலையெழுத்து இல்லை, முற்பிறவிகளில் அவரவர் செய்த வினைகளின் (செயல்களின்) பதிவு ஆகும்.

முற்பிறவிகளில் நல்ல கர்மங்களை (செயல்களை) செய்திருப்பின் அதன் பலனாக இப்பிறவியில் நல்ல எதிர்வினை உருவாகி அதன் பயனாக நன்மை தரும் பலன்கள் கிடைக்கும்.

இதே ஒருவர் முற்பிறவியில் கெட்ட கர்மங்கள் கூடிய செயல்களை செய்திருப்பின் அதன் பலனாக இப்பிறவியில் துன்பமும் துக்கமும் அடைந்திருக்கும் நிலை ஏற்படும்.

ஒவ்வொரு மனிதனின் நல்வினை மற்றும் தீவினைகளின் தொகுப்பே கர்மா எனப்படும்,

இது பிறவிதோறும் தொடரும் மற்றும் கணக்கிடப்படும் அதாவது மிகச்சரியாக கணிக்கப்பட்டு தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். பின்வரும் பாடலில் இது புரியும்.

"கருவமைப்பின் வழிவந்த வினைப்பதிவு சஞ்சிதமாம்
உருவெடுத்தபின் கொண்ட வினைப்பதிவு பிரா ப்தமாம்
இருவினையும் கூடியெழும் புகுவினையே ஆகாமியமாம் - இங்கே
ஒருவினையும் வீண்போகா, உள்ளடங்கிப் பின்விளைவாம்"(ஞாக.பா.)

மேற்கண்ட பாடலின்படி மனிதன் தன் பிறப்புகள் தோறும் மூன்று வகையான கர்மவினைப் பயன்களைப் பெற்று அனுபவிக்கிறான், அவை முறையே சஞ்சித கர்மம், பிராப்த கர்மம். ஆகாமிய கர்மம்.

”முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்” என்று முந்தைய வினை முழுவதையும் ஒழிக்கலாம் என்கிறது திருவாசகம் இப்பாடலில்.

சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான். 20

- அடங்காத இன்பம் அருளும் கருணையின் மலை போன்றவனுக்கு போற்றுதல்கள்.
- சிவபெருமான் என்னுடைய சிந்தையில் பெருங்கருணையால் வந்திருக்கின்ற காரணத்தால் அவனுடைய திருவருளே துணையாகக் கொண்டு அவனுடைய திருவடியை வணக்கம் செய்து உள்ளம் மகிழும் வண்ணம் சிவபுராணமாகிய இதனை முன் செய்த வினைகள் எல்லாம் தீரச் சொல்லுகின்றேன்.

முந்திய வினையான சஞ்சித கர்மத்தை நீக்கும் வழி என்ன? வேதாத்திரியம் என்ன சொல்கிறது?

ஆண் பெண் என இரண்டு உயிருள்ள சீவன்களின் அலைத் தொகுப்பு களின் சுருங்கிய நிலைதான் விந்துவும், நாதமும்.

இவையிரண்டும் கூடிய விளைவுதான் இன்னொரு சீவன். பெற்றோர்களின் இரண்டு அலைத் தொகுப்புகளின் இணைப்புதான் குழந்தையின் அலைத் தொகுப்பாகிய அதன் ஆத்மாவாகிறது.

குழந்தையின் ஆத்மாவில் பெற்றோர்கள் மூலமாக வந்த பதிவுகள் அடங்கி இருக்கும். இப்படி அடங்கியிருக்கிற ஆரம்பப் பதிவுகள முதல் விதி என்றும சஞ்சித கர்மம் என்றும் சொல்லுகிறோம்

"தந்தையாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து
  தழைத்தொரு உடலாகி உலகில் வந்தேன்
அந்த ஈருயிர் வினைகள் அறமோ மற்றோ
  அளித்த பதிவுகளெல்லாம் என் சொத்தாச்சு" (ஞாக.பா.11)

ஒரு குழந்தை அதன் பெற்றோர்களின் மறுபிறவியாகியது.

பெற்றோர்களின் பாவ, புண்ணியப் பதிவுகள், கருத்தொடர் மூலமாகப் பிள்ளைகளுக்குச் சேர்ந்து, பெற்றோர்கள் அனுபவிப்பதோடல்லாமல் அந்தப் பதிவுகளின் விளைவைப் பிள்ளையும் அனுபவிக்க வெண்டும்.

ஆகவே நாம் சொல்கிறோம். "முற்பிறவியில் நிகழ்ந்த பாவ, புண்ணிய செயல்களுக்கேற்ப இப்பிறவியில் அதன் பலன்களை நாம் அனுபவிக்கிறோம்" என்று.

இதனைத்தான் சஞ்சித கர்மம் என்கிறோம்.

சஞ்சித கர்மம் என்பது நமது முன்னோர்கள் செய்த புண்ணிய பாவத்தின் தொகுப்பாகும்.

அவை வழி வழியாகச் சந்ததிகளுக்கு வந்து சேரும் வினைப்பதிவாகும்.

எனவே தான் ஒரு மனிதனானவன் தான் எந்தத் தவறும் செய்யாவிட்டாலும் கூட துன்பமும் தூரமும் அவனது வாழ்க்கையில் உண்டாகித் கொண்டிருக்கின்றன.

சஞ்சித கர்ம வினைப்பதிவுகளைத் தீர்த்துக் கொள்ள கீழ்க்காணும் மூன்று வழிகள் உள்ளன என்கிறது வேதாத்திரியம்.

1) பிராயச்சித்தம்
2) மேல்பதிவு
3) தவம்.

பழிச்செயல் நீக்கமும் தவங்களும்.

பிராயச்சித்தம், மேல்பதிவு, அடியோடு அழித்தல் (Expiation, superimposition & dissolution) என்று கருமப் பதிவுகளைப் போக்கிக் கொள்ள மூன்று வழிகள் உள்ளன.

ஆக்கினைத் தவத்தினால் ஆகாமிய கர்மம் போகும்.

துரிய நிலைத் தவத்தில் ஆகாமிய கர்மமும், பிராரப்த கர்மமும் போகும்.

துரியாதீத தவத்தில் ஆகாமிய கர்மம், பிராரப்த கர்மம், சஞ்சித கர்மம் ஆகிய மூன்றுமே போகும். நீண்ட நாள் மருந்தினால் போகாத நோய் கூடத் துரியாதீத தவத்தால் நீங்கும்.

"தூயோ மாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும்
புகுதருவா நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்."

என்ற திருப்பாவைக் கருத்தை இங்கு நினைவிற் கொள்வோம்
நானே அவனாகும் பேற்றின் பயனை திருக்குறளும் விளக்குகின்றது.

இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தாரிடம் முன் வினையும் ஒழிந்து போம். இனியொரு தீவினையும் அவர் புரியார். பழைய வினைகளும் ஒழிந்து விடும். புது வினைகளும் பற்றாது.

# 6. பொல்லா வினையேன்

மனித உடலில் சீவகாந்தம் சுழன்றோடி நடுமையத்தில் திணவு பெற்று கருமையமாக விளங்குகின்றது.

இந்தக கருமையத்தில் எல்லாப் பதிவுகளும் பதிவு ஆகின்றன.

சீவகாந்தமே கருமையத்திலிருந்து எண்ணமாக மலர்கிறது.

நாம் செய்கின்ற செயல்களும் அதன் விளைவுகளும் கருமையத்தில் பதிவாகின்றன.

இந்தப் பதிவுகளை 1. கருவமைப்புப் பதிவு (சஞ்சித கர்மம்)
2.மேலடுக்குப் பதிவு (பிராரப்த கர்மம்) என்று சொல்லுவார்கள்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன் 25

- நெற்றியிலே ஒரு கண்ணுடைய பெருமான் தன்னுடைய கருணைக்கண் காட்டியதால் இங்கு வந்தேன்.

- சிந்தனைக்கு எட்டாத பேரழகு மிக்க கழல்பூண்ட திருவடிகளை தொழுது நின்று,
- வானம், பூமி மற்றும் இவை தவிர மீதி உள்ளன யாவையுமாய், ஒளிமிக்கதாயும், அளவிடும் எல்லைகள் எல்லாம் கடந்து உள்ள பெருமானே,
- உன் பெரிய பெரிய தன்மைகளை மோசமான வினைகளில் கிடக்கும் நான் புகழ்ந்து போற்றும் வகை தெரியாது இருக்கிறேன்.

மோசமான வினைகளை களை வழி காட்டுகிறது வேதாத்திரியம்

வினைஎதுவும் நலம்தீது என்பது இல்லை.
வினையும் அதனை ஆற்றுபவர் நோக்கம் கொண்டே
வினையதனை நலம்தீது எனப் பிரிப்போம்.
விழிப்புடனே எண்ணம் எழும்போதே தேர்வோம்.
வினை, காலம், இடம்,தொடர்புப் பொருளுக்கும் ஏற்ப
வெவ்வெறு அளவு இன்ப துன்பம் நல்கும்.
வினைகள்தமை உடல்தகுதி, உலகம் ஒப்ப,
உயர் இயற்கை நியதிஒக்க ஆற்றமேலாம்.” (ஞாக.பா.1285)

மனத்தூய்மை செய்வதற்கு நல்லதோர் பயிற்சி மவுனம்(Silence)* ஒவ்வொருவரிடமும் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு ஆயிரம் தேவையில்லாத கருத்துகள் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

*ஒரு நாளைக்கு மௌனத்தில் உட்கார்ந்தீர்களானால் தானே வரும். அதில் பத்து பதினைந்து கருத்துகளை எடுத்து முடிவு கட்டுங்கள்.*

*ஓரிரு மாதங்களில் முடிவு பண்ணிவிடலாம். மறுபடியும் அதே கருத்து வரும் போது அதே அழுத்தம் கொடுத்து கெட்ட கருத்துகள், செயல்கள், எண்ணங்கள் எத்தனை உண்டோ அத்தனையும் நல்லதாக்கி விடலாம்.*

இதற்கு உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால்தானே நேரம் கொடுத்தால் தானே வரும்? நாம் கொடுக்கிறோம். *நமக்கு இறைவன் கொடுத்த மௌனம் ஒன்று இருக்கிறது. அதுதான் ராத்திரியில் தூக்கம். அங்கே மறந்து விடுகிறோம். அதனால் ஒன்றும் செய்ய முடிவதில்லை.*

எனக்கு வேலையில்லை. அதனால் ஒரு மாதம் மௌனத்தில் உட்கார்ந்தேன். முடிந்தவர்கள் ஒருநாள் இரண்டு நாள் உட்கார்ந்தார்கள்.

சிலருக்கு ஒரு நாளைக்குக் கூட உட்கார முடியவில்லையே என்று மன வருத்தம் இருக்கிறது. அதற்காக வருந்தவே வேண்டியதில்லை.

யாராகிலும் ஒருவர் நமக்குத் தேவை இல்லாத வார்த்தையைச் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லாமல் எரிந்து விழறது என்று இல்லாமல் அந்த இடத்தில் மாத்திரம் மௌனம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம் இல்லையா? இதற்கு நேரம் தேவையில்லை.

இந்த மவுனத்தை எல்லோரும் பண்ண வேண்டும்.
ஒரு நாளைக்கு மவுனம் என்று சொல்லிவிட்டு வீட்டிலேயே இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

பத்துப்பேர் இருக்கிற வீட்டில் நீங்கள் மௌனமாக இருந்தீர்களானால் அவர்களுக்கு அது பொருந்தாது. ஒருத்தர் உட்கார்ந்து மௌனமாக இருக்கிறார்களே இருக்கட்டும் என்று அவர்களால் இருக்கவும் முடியாது. எப்படியாவது தொந்திரவு (disturbance) வரும்.

அப்போது ஒருவர் வந்து "ஐயா இருக்கிறார்களா?" என்று கேட்பார். "அதோ உட்கார்ந்து கொண்டு இருக்கு பாருங்கள்" என்பார்கள்!. ஏன் என்றால் அவர்களுக்கு சுயகவனம் (attention) வேண்டும். அங்கே சுயகவனம் (attention) இல்லை.

*ஆகையால் அனேகருக்கு வீட்டில் மௌனம் இருக்க முடியாது என்று எல்லோரும் சேர்ந்து "அறிவுத் திருக்கோயில்" என்று ஒன்றை கட்டி வைத்திருக்கிறார்கள்.*

சந்தர்ப்பம் வரும்போது ஒருநாளைக்கு இங்கு வந்து மௌனம் இருக்கலாம். *இந்தக் காலத்தில்தான் இருக்கலாம் என்று இல்லை. இருப்பதற்கு இங்கு இடம் இருக்கிறது. என்றைக்கு வந்தாலும் மவுனம் இருக்கலாம்.*

நீங்கள் இரண்டு மூன்று நாள் மௌனம் இருக்கும் வரைக்கும் மேலாக இருக்கிற அலையெல்லாம் வந்து கொண்டிருக்கும்.

போகப் போக ஆழமாகவுள்ள பதிவுகளெல்லாம் வரும். அதற்கும் மேலே போனால் இயற்கை உண்மைகளெல்லாம் வர ஆரம்பித்து விடும்.

*ஏனென்றால் நீங்கள் பேசாதிருக்கும் போது இறைவன் பேசுகிறான். இப்படிச் சொல்வது வேறு ஒன்றுமில்லை.

எப்போதும் அவன் இருக்கிறான், அவன் பேசுகிறான், அதைக் கேட்பதற்கு இல்லாமல் நாம் வேறு எதையோ கேட்டுக் கொண்டிருந்தால் அவன் பேசுவது கேட்பதில்லை.

அதனால் நம் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு கொஞ்சநேரம் அதற்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக மவுனம் இருக்க வேண்டும்.*

மவுனத்தை உணர்ந்து, அதன் பெருமையை, நன்மையை உணர்ந்து செய்யுங்கள். பிறர் கருத்தை ஒத்துக் கொள்ள முடியாதபோது அவர்களிடம் எரிந்து விழாமல் அந்த இடத்தில் மவுனமாக இருப்பது நல்லது. எல்லோரும் தூங்கும்போது மவுனமாகத்தான் இருக்கிறார்கள்.

*தூங்கும்போது மவுனமாக இருந்தால் அமைதி வந்துவிடுகிறதே தவிர அந்த அமைதியினால் அறிவு விருத்தி ஆவது இல்லை.*

எனவே இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் மவுனத்தில் அதன் பெருமையை உணர்ந்து கொள்ளலாம்.

எப்படி கண்ணாடி அதிகமான சூரிய வெளிச்சத்தை வாங்கி மற்றதை எரிக்கக்கூடிய வல்லமை பெறுகிறதோ *அதேபோல மவுனத்தில் ஏற்படக் கூடிய (Vortex) சுழல் மையம் நம்முடைய ஜீவகாந்த சக்தி (Bio-Magnetic force) அதிகமாக ஆக ஆக அதில் சுழற்சி அதிகமாக ஆக ஆக மைய ஈர்ப்பு அதிகமாகும்.

அந்த மைய ஈர்ப்பு அதிகமாகி விட்டதென்றால் எண்ணங்களையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். மற்றவர்களுடைய நட்பும் அதிகமாக இருக்கும். எல்லோருக்கும் உங்கள் பேரில் விருப்பமும் மதிப்பும் தானாகவே உருவாகும்.*

*இத்தகைய பெருமையெல்லாம் தரக்கூடியது மௌன நோன்பு. இரண்டு நாள், மூன்றுநாள் என்று புள்ளி விபரம் (statistics) கொடுக்காமல் மவுனத்தில் சாதித்தது என்ன? என்று பாருங்கள். வீட்டிற்குச் செல்லும் போது மௌனத்தின் பயனை அனுபவிக்க வேண்டும்.*

அப்படியில்லாமல் "நீங்க எங்கே போய்விட்டு வந்தீர்கள் எட்டு நாளா?.. என்றால், "நான் மௌனத்திற்காக அறிவுத் திருக்கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன்".

"ஆமா, அறிவுத்திருக்கோயிலில் என்ன பண்ணினீர்கள்?"

"ஆ, அதையெல்லாம் உனக்கு சொல்லிக் கொண்டு இருக்க முடியாது". உனக்குத்தான் ஒன்றும் புரியாது" என்று கூறி உடனே ஒரு சண்டை. இது என்ன மவுனம்?

*அமைதியாக இருந்து இன்னும் இரண்டு தடவை யார் கேட்டாலும் சரி. அதற்கு நல்ல பதிலைச் சொல்லி, முடிந்தவரைக்கும் சொல்ல வேண்டும். முடியாதபோது நான் இன்னும் விளக்குகிறேன்.

மீண்டும் விளக்குகிறேன். என்று சொல்லலாம் அல்லவா?*
மவுனத்தின் பயனை எல்லோரும் பயன்படுத்த வேண்டும்.
மவுனத்திலே ஒரு பெரிய ஆத்ம சக்தி உருவாவதை உணர வேண்டும்.

*மனிதனுடைய கருமையத்தை தூய்மையான எண்ணங்களால் அழுத்தம் கொடுத்துக் கொண்டேயிருந்தால் ஆயிரமாயிரம் பங்கு விளைவுகளை கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

மனத்தூய்மை செய்வதற்கு நல்லதோர் பயிற்சிதான் மவுனம்.*

# 7. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்

தற்சோதனை மூலம் தனது பாவப் பதிவுகளை உணர்ந்து 1. பிராயசித்தம். 2. கடமையறத்தால் அழித்து ஒழித்தல். 3. பரம் பொருளுணர்வால் தூய்மை ஆக்குல் என்ற மூன்று வழிகளால் பாவப்பதிவுகளை நீக்கித் தூய்மை பெற்றால்தான் பிறவித் தொடர் அறும்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள் 31

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே 35

- புல்லாகவும்,
- சிறு செடிகளாகவும்,
- புழுவாகவும்,
- மரமாகவும்,
  பலவகை மிருகங்களாகவும்,
- பறவைகளாகவும்,
- பாம்பாகவும்,
  கல்லில் வாழும் உயிராகவும்,
- மனிதராகவும்,
- உடல் நீங்கிய பேய்களாகவும்,

- பலதரப்பட்ட கணக்கூட்டங்களாகவும்,
- வலிமை மிகுந்த அசுரர்களாகவும்,
- முனிவராகவும், தேவராகவும்
- இந்த அசையும் மற்றும் அசையாதவற்றால் ஆன (அண்டம்) முழுதும் சென்று
- எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்துவிட்டேன், எம்பெருமானே!

உன்னுடைய தங்கத் திருவடிகளைக் கண்டு இன்று உண்மையாகவே வீடு பேறடைந்தேன்.

- நான் உய்யும் பொருட்டு எனது உள்ளத்துள் ஓம் எனும் ஒலியாய் எழுந்த உண்மைப் பொருளே!
- காளையை ஓட்டி வருபவனே!
- வேதங்கள் “ஐயா!” எனப் பெரிதும் வியந்து கூறி ஆழமாகவும் பலபல தன்மைகளைப் பெருகி ஆராய்ந்தும் காண முயலுகின்ற மிகச்சிறிய பொருளுமாக.

பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த வென்றால்,
 பெருவிழிப்பாய் இருவழியில் வெற்றிவேண்டும்.
பிறப்புஎழாமல் புதிதாய்க் கருவின் மூலம்
 பேணிப் பாலுறவு அறவே தடுக்க வேண்டும்.
பிறப்பதனைப் பெருக்குகின்ற தன்முனைப்பு,
 பெரும்பாவப் பதிவுகளும் பற்றும் போக்கி,
பிறப்பறுக்கும் அகத்தவமும் அறமும் ஆற்றி,
 பேரறிவாய் அறிவறிந்து நிலைக்க வேண்டும்.” (ஞாக.பா.1314)

ஒரு மனிதன் பெற்றோர் விந்து நாதத்தில் உள்ள தரத்தை சஞ்சித கர்ம வினையாகப் பெற்று. அந்தத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு உடலை, மனதை இயக்கி பிராரப்த கர்ம வினையை சேர்த்துக் கொள்கிறான்.

அதுவே அவனது ஆன்மாவில், அறிவின் தரமாகியது. ஆன்மக் களங்கங்கள் தூய்மை பெறும் வரை பிறப்பு இறப்பும் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும்.

கடலுக்கு எல்லையைக் காண முடியாதது போல் பிறப்பு இறப்புத் தொடருக்கும் எல்லை இல்லை.

பிறப்பு இறப்பு என்னும் வாழ்க்கைக் கடலைக் கடந்து பிறவியின் நோக்கமாகிய இறையனுபூதி நிலை கிட்ட வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? இரு வகைகளில் விழிப்பு நிலையில் செயல்பட வேண்டும் அப்போது வெற்றி கிட்டும்.

களங்கமான பின்பிறவிகளை உருவாக்கும் ஆண் பெண் பாலுறவை அறவே தடுத்து புதிதாக் கருவின் மூலம் பிறப்பு ஏற்படாமல் காத்துக் கொள்வது ஒன்று.

மனிதனின் தன் முனைப்பால் வரும் பாவப் பதிவுகளும், உலகியல் பற்றும் ஆன்மாவைக் களங்கப்படுத்தி பிறப்பைப் பெருக்குகின்றது.

அதனைத் தவிர்ப்பதற்கு அகத்தவத்தின் மூலம் மனதை உயிரில் அடக்கியும் ஒடுக்கியும் அறிவை அறிந்து, அறநெறியில் வாழ்ந்து பேரறிவு நிலையில் நிலைப்பது மற்றொன்று ஆகும்.

# 8. எஞ்ஞானம் இல்லாதேன்

ஆறாவது அறிவைப் பெற்ற மனிதப் பிறவியினது நோக்கம் என்ன?

இறைநிலையே, மனிதனிடத்தில் அறிவாக விளங்குகின்றது என்ற உண்மையினைத் தெரிந்து கொண்டு நிறைவு மற்றும் அமைதி பெறுவதாகும்.

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே 40

- வெப்பமாகச் சுடுகின்றவரும், குளுமையாக இருக்கின்றவரும் நீரே.
- என் உரிமையாளனாக உள்ள மாசற்றவனே!
- பொய்மைகள் எல்லாம் அகலும் வண்ணம் வந்து அருள்செய்து, உண்மை அறிவாக ஒளிவிடும் மெய்ச்சுடரே!
- எந்த அறிவும் இல்லாத எனக்கும் இன்பமாம் பெருமானே!
- அறிவின்மையைப் போக்கும் நல்லறிவே!

அறிவைப் பற்றி தெரிந்து கொள்வோம் - வேதாத்திரியம்

”எரிகின்ற விளக்கிலே வெளிச்சம் போல
  இயங்குமுடல் தனிலிருந்து, ரத்த சக்தி,
சொரிகின்ற கதிர்அலைகள் அறிவு ஆகும்.
  சோர்வடைந்து. உடல்பலமும் குறையும் போது,
எரிகின்ற எண்ணஅலை வேகம் குன்றும்.
  விவேகத்தைப் பயன்படுத்தப் பழகி விட்டால்,
தெரிகின்ற ரகசியமே, அறிவ தெல்லாம்

தன்பொருளே! என்ற பேருண்மை யாகும்." (ஞாக.பா.1185

சுற்றுப்புறத்திலுள்ள பொருட்களைத் தெளிவாக துலாம்பரமாக விளக்கிக் காட்டும் கருவியை விளக்கு என்கிறோம்.

விளக்கின் சுடரிலிருந்து வெளிவரும் விரிவலை வெளிச்சமாக உள்ளது.

விளக்கின் வெளிச்ச ஒளி போல, இயங்கும் உடலிலிருந்து ரத்த சக்தி பொழிகின்ற கதிர் அலைகள் அறிவு எனப்படும்.
உடலில் சக்தி பல வகைகளில் வெளியேறுவதன் காரணமாக சோர்வுற்று உடல் பலமும் குறையும்.

அதனால் எண்ணங்களின் அலைகள் விரிவடைகின்ற வேகமும் குறையும்.

அறிவு என்னும் விவேகத்தைப் பயன்படுத்தி உடல் இயக்கத்தையும், மன இயக்கத்தையும் கட்டுபபடுத்தப் பழகி விடுவோமேயானால், அறிவால் அறியும் அனைத்துமே தன் பொருளான சக்தியே என்ற பேருண்மையை ரகசியத்தைத் தெரிந்து கொள்ளலாம். வாழ்க வளமுடன்.

## 9. அனைத்து உலகும் ஆக்குவாய்

இரும்பே கரண்டியாயிருக்கிறது. இரும்ப என்றாலும், கரண்டி என்றாலும் ஒரே பொருளையே குறிக்கும்.

அதுபோல், தெய்வமே எல்லாமுமாக இருக்கிறது. மனித வடிவாக இருப்பதும் அதுவே.

மனிதன் என்றாலும், தெய்வம் என்றாலும் ஒன்றே.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக்கு கெடுத்த வடிவம் மறைந்து விடும். கரண்டி என்ற பெயரும் மறைந்துவிடும்.

இது போல்தான் எல்லா உயிர்களுக்குள்ளும் இறைநிலை என்ற பிரம்மம்தான் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே 45

- தோற்றம், குறித்த வயது, முடிவு இல்லாதவனே!

- நீ உலகங்களையெல்லாம் தோற்றுவிக்கின்றாய்,
- தொடர்ந்து (அழியாது) இருக்கச் செய்கின்றாய்,
- (இறுதியில்) அழிக்கின்றாய்,
- அருள் தந்து உய்யக் கொள்கின்றாய்,
- உயிர்களை மாயைக்குள் போக்குவாய்!
- நீஎன்னை உன்னுடைய அடியார் கூட்டத்தில் புகவைப்பாய்.
- மணத்தினும் (வாசனை) நுண்மையான (சூச்க்ஷ்சுமமான) பொருளே!
- வெகு தொலைவாகியும், மிக அருகில் இருப்பவனே!
  சொல்லிற்கும் சிந்தனைக்கும் எட்டாது நிற்கும் மறைபொருளே.

உலகம் எப்படி தோன்றியது – வேதாத்திரியம்

”ஆதியெனும் பரம்பொருள் மெய் எழுச்சிபெற்று
  அணுவென்ற உயிராகி, அணுக்கள் கூடி,
மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக்கு ஏற்ப,
  மூலகங்கள் பலவாகி, அவை இணைந்து,
பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்
  பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி, (ஞாக.பா.1)
-------”

ஆதி என்றால் அதற்கு முன்னதாக என்று கூறுவதற்கு எதுவுமில்லை. எனவே அனாதி எனலாம்.

பரம் என்றால் அதைவிடப் பெரியதுமில்லை. நுண்ணியதுமில்லை. பொருள் என்றால், எது நீடித்ததோ, நிலைத்தோ, மாறாததோ அதுவே உண்மைப்பொருள் சத்தியப்பொருள்.

மெய் என்றால் உடலென்ற பொருளும் வரும். உண்மை என்ற பொருளிலும் பயன்படுத்துகிறோம்.

நாம் சாதாரணமாகத் தோற்றப் பொருட்களையே பொருள் என்று கூறிப் பழகியுள்ளோம்.

அதனால்தான் வள்ளுவரும் “பொருள் அல்லவற்றைப் பொருள் என்று கூறும் மருளானாம் மாணாப் பிறப்பு” என்கிறார்.

ஆதியாகிய, மெய்ப்பொருள், இப்படித்தான் இயங்கவேண்டும் என்ற தன் அறிவாலும், தனது ஆற்றலாலும் இருப்பாக இருந்தது எழுச்சி பெற்று, இயக்க மலர்ச்சியில் அணு என்ற உயிராகியது.

மெய் அசைந்தால் அது உயிர், அணுக்கள் நெருங்கி இயங்கும்போது மூலகம் என்ற நிலையில் நிலம், நீர், நெருப்பு, காற்று எனும் பௌதீகப் பிரிவுகளாகி, பௌதீகப் பிரிவுகள் இணைந்து எண்ணிலடங்காத கோள்களை உள்ளடக்கிய பேரியக்க மண்டலமாகியது.

எண்ணிலடங்காத கோள்களில் ஒரு கோள் ஆகிய நிலவுலகத்தில் ஐந்து பௌதீகப் பிரிவுகளும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் இணைந்து ஒன்றையொன்று காக்கும்படியான அமைப்பில் காந்தச் சுழலும் கருமையமும் அமைந்த போது, சடமாக இருந்தது ஜீவன் என்ற நிலையில் மலர்ச்சி பெற்றது.

உணர்தல் என்ற சிறப்பில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை தன்நிலையில் மாற்றம் பெற்றது. இயற்கை நியதியை அறிந்து தெளிந்து ஆறாவது அறிவு பெற்ற மனிதர், வாழ்வின் நோக்கத்தையும், பிறவியின் நோக்கத்தையும் உணர்ந்து ஒத்தும் உதவியும் இனிமையாக வாழ்வோம்.

மெய்யியல், விண்ணியல், பிரபஞ்சவியல், உயிரியல், மானுடவியல் ஆகிய அனைத்து அறிவியலும் இணைந்துள்ள சுருக்கமான விளக்கத்தை இந்த இறைவணக்கக் கவி உணர்த்துகிறது.

## 10. வல்வினையேன் தன்னை

மனிதகுல வாழ்வில் பல தவறான உணர்ச்சி வயப்பட்ட எண்ணங்களும், செயல்களு ம் உருவாகின்றன. இவை பாவப் பதிவுகளாகக் கருமையத்தில் பதிவாகின்றன.

தன் பதிவுகள் அனைத்தும் நீக்கவிட்டால் மனிதனுக்கு மீண்டும் பிறவி ஏற்படாது.

அதற்கு அறுகுணங்களை சீரமைத்துக கொண்டும் பழி செயல்களை நீக்கியும் வாழ்ந்து முழுமைப்பேறு அடையலாம்.

மீண்டும் பிறவி ஏற்படாது, தவத்தில் முழமைப்பேறு பெற்று பிறவித் தொடர் அறுபடும்.

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை 50

- அப்போது கறந்த பாலோடு கரும்பின் சாறும் நெய்யும் கலந்தால் எவ்வாறு இனிக்குமோ அவ்வாறு சிறந்து,
- அடியவர்கள் மனத்தில் தேன் ஊற்றெடுத்தாற் போல நின்று,

- இப்பிறவியை முற்றுப் பெறச்செய்யும் எங்களுடைய பெருமானே!
- ஐந்நிறமும் நீயே ஆனாய்!
- வானவர்கள் போற்றி நிற்க அவர்களுக்கு அரியவனாக மறைந்திருந்தாய், எம்பெருமானே!

## வினைத்தூய்மை செய்தால்...வல்வினையேன் என்று சொல்ல வேண்டாமே!

வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை
  வேண்டுவது இன்றியமையாததாகும்.
வினைத் தூய்மை ஒழுக்கமுடன், கடமை, ஈகை
  விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
வினைத் தூய்மை வித்தான மனதின் தூய்மை
  விண் உணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய,
வினைத் தூய்மை மனத் தூய்மை ஒன்றை ஒன்று
  உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1286)

வினை என்பது செயல் ஆகும். தூய்மையான உயர்வான, தீங்கு வராத குற்றமற்ற நன்மை தரத்தக்க செயல்களைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முதலில் செய்ய வேண்டியது மனத் தூய்மையாகும்.

மனம் தூய்மை பெறாமல் வினைகள் தூய்மை பெற முடியாது. மனம் என்பது ஒரு பொருள் அல்ல. அனுபோக அனுபவங்களாக உள்ள எண்ணங்களே ஆகும்.

எண்ணம் தான் செயலாக மலர்கிறது. அறநெறிகளான ஒழுக்கம், கடமை, ஈகை மூன்றையும் கடைப்பிடித்தால் வினைத்தூய்மை கிட்டும்.

வினைத் தூய்மைக்கு விண் என்னும் உயிரை உணர்கின்ற அகத்தவத்தின் மூலமாக உள்ள மனதின் தூய்மைக்கு, உதவியாகிறது. இரண்டுமே ஒன்றை ஒன்று உயர்வடையச் செய்து மனிதனை தெய்வ நிலையை அறியச் செய்யும்.

# 11. ஐந்து புலன்களையும் அடக்கலாம்

ஐந்தில் அளவு முறை வேண்டும்.

அமைதி எனும் சம உணர்வே, அறிவுக்கும் உடலுக்கும் பொருத்தமான உணர்வே, உண்மையான இன்பமாகும்.

உணவு, உழைப்பு, உறக்கம், பாலுறவு, எண்ணம் இவற்றில் அளவோடும், முறையோடும் செயலாற்ற வேண்டும்.

இந்த ஐந்தில் ஒன்றைக் கூட அலட்சியம் செய்வது கூடாது. அதாவது அடியோடு தடைப்படுத்தவோ, மிகவும் குறைத்துவிடவோ கூடாது;

மிகுதியாகவும் கொள்ளக் கூடாது; முரண்பாடாக அனுபவிப்பதும் கூடாது.

விழிப்பு நிலையோடு மிதமாக உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் எனும் இவ்வைந்தோடு செயல்புரிய வேண்டும்.

இதனால் துன்பம் எழாமல் காக்கலாம். இயற்கையாக எழும் ஒரு துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் அனுபவமே ஒரு இன்ப உணர்வு ஆகும்.

இன்பத்தை நாடி மிகுதியாக இவற்றை அனுபவிக்கும்போது, உயிராற்றல் மிகுதியாகச் செலவாகி அதன் விளைவாகத் துன்பம் தோன்றும்,

துன்பம் மிகும். ஐம்புலன் கருவிகளின் நலமும், பொதுவாக உடல் நலமும் கெடும்.

மேலும், மனிதன் தனது உயிராற்றலின் மதிப்புணர்ந்து அதைப் போற்றிக் காத்து வரவேண்டும்.

மனிதனுக்கு உயிராற்றல் தான் ஒரு பெரும் நிதி. உடல் உறுப்புக்களாலும், ஐம்புலன்களாலும் ஆற்றும் செயல்களில் உயிராற்றலானது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்னும் பஞ்சதன் மாத்திரைகளாக மாற்றம் பெற்றுச் செலவாகிக் கொண்டே இருக்கிறது.

இந்த உயிராற்றல் மிகுதியாகச் செலவாகாமல் காத்துவர வேண்டியது அவசியம்.

ஐம்புலன்கள் மூலமாக உயிராற்றல் மிகுதியாகச் செலவானால் (1) ஐம்புலன் கருவிகள் கெடும் (2) உயிராற்றலின் அளவும், அழுத்தமும்

உடலில் குறைந்து உடல்நலம், மனநலம் இரண்டும் குழப்பமடையும். இதன் அவசியத்தையே திருவள்ளுவர்,

"சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றமென்றைந்தின்
வகை தெரிவான் கட்டேயுலகு"

என்று அருளியதையும் நினைவு கூற வேண்டும்.

விழிப்பு நிலையோடு ஐம்புலன்களின் இயக்கத்தை அளவுபடுத்திக் கொள்வதால் துன்பம் எழாமல் காக்கலாம்;

நிலையான இன்பத்தையும் அனுபவிக்கலாம்.

நெறியுடன் வாழும் இத்தகைய வாழ்க்கை முறையால், தானும் நலமுடன், மகிழ்ச்சியுடன், அமைதியுடன் வாழலாம்; பிறரையும் நமது உதவியால் நலமாக வாழ வைக்கலாம்.

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய, 55

- கொடிய வினையில் சிக்குண்டிருக்கும் என்னை
  மறைத்து மூடிய மாயையாகிய இருளினை
  செய்யத் தகுந்தது, செய்யத் தகாதது என்னும் விதிகளால் கட்டி,
- மேலே ஒரு தோலும் சுற்றி,
- கெட்டுப் போவதாகவும்,
- அழுக்கினை உடையதாகவும் உள்ள திசுக்கள் நிறைந்து,
  மலத்தினை வெளியேற்றும் ஒன்பது துளைகள் உள்ள வீடான
  இவ்வுடலை வைத்துக்கொண்டு
  மயங்கி நிற்க,
- ஐந்து புலன்களும் ஏமாற்ற,

ஐந்து புலன்களையும் அடக்கலாம் வேதாத்திரியம்.

"ஐந்து புலன்களையும் அடக்கி புருவத்திடையே
  அறிவினது மூலத்தை ஆழ்ந்து நோக்க அமர.
சிந்தை அடங்கிடும், சீவனே சிவனாகும்.
  சிறுகச் சிறுகப் பயன்றால் சித்திக்கும் உண்மை நெறி." (மாக்கோலம்)

# 12. அன்பும் கருணையும்

ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில்  இருப்பது அன்பும் கருணையும்தான்.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் 60

- ஒருமைப்படாமல் சிதறுகின்ற சிந்தனைகளை உடைய மனத்தால், மாசிலாதவனே,
- உன்னிடம் கலந்து நிற்கின்ற அன்பு நிறைந்து,
- அந்நிறைவால் கசிந்தும்,
- உள்ளம் உருகி நிற்கின்ற நல்ல தன்மை இல்லாத சிறுமையுடையவனாகிய எனக்கும் அருள்செய்து,
- இந்த உலகில் உணரத்தக்க வண்ணம் கருணையால் வந்து,
- உன்னுடைய நீண்டு அழகிய கழலணிந்த திருவடிகள் காட்டி,
- நாயினும் கேவலமான நிலையில் கிடந்த அடியேனுக்குப் பெற்ற தாயினும் அதிகமான அன்பு உடையவனான தத்துவப் பொருளே!

## அன்பும் கருணையும் - வேதாத்திரியம்

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அன்பும் கருணையும் தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம்.

அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ, மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து அதனைக் காத்து வருவது கருணை.

ஒரு முட்டையைப் பாருங்கள். அதிலுள்ள அணைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஓடு பிடித்துக் கொண்டிருக்கிறது. இது போன்றது அன்பு.

முட்டைக்குள்ளிருக்கும் மஞ்சட் கருதான் குஞ்சு ஆக உருவாக இருக்கிறது. அந்த மஞ்சட் கருவுக்கு அதனைச் சுற்றியுள்ள வெள்ளைக்கரு தேவையான எல்லாப் பொருட்களையும் அளித்து நலமளிக்கின்றது. இது போன்றது கருணை.

.

ஒரு மாமரத்தில் பிஞ்சுவிடுகிறது. அதனைச் சிறு காம்பின் மூலம் விழுந்து விடாமல் மரமானது பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அன்பு.

அவ்வாறு பிடித்துக் கொண்டே பிஞ்சு வளர்வதற்குத் தேவையான ரசாயன நீரை அந்த மரம் பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. அது தான் கருணை.

.

உயிரினங்களில் ஒரு குழந்தையைப் பெற்ற தாய் அதனை எப்போதும் தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டோ அல்லது அது பிரிந்து போய் விடாமல் கண்காணித்துக் கொண்டோ இருக்கிறாள் இது அன்பு.

அதே காலத்தில் அந்தக் குழந்தை வளர்வதற்கும் வாழ்வதற்கும் தேவையான பால், உணவு இவைகளை அது வளர்ச்சி பெறும் வரையில் ஊட்டிக் கொண்டே இருக்கிறாள். இதுதான் கருணை.

## 13.பழக்கமே பற்றாக! பாசமாக!

பழக்கத்தால் மனிதன் உயரவும் முடியும் தாழவும் முடியும்.

இந்தப் பழக்கம் நமக்குத் தேவைதான? இதிலிருந்து விடுபட முடியாதா? என யாருமே சிந்திப்பதில்லை.

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப் 65

- குற்றமற்ற தூய ஒளி மலர்கின்ற மலர் போன்று இனிய சுடரே!
- ஒளியுருவினனே!
- தேன் நிறைந்த அமுதமே!
- சிவபுரத்தை உடையவனே!
- பாசமாகிய கட்டினை அறுத்துத் திருவருள் புரியும் அறிவிற் சிறந்தோனே!
- இனிய அறக்கருணை புரிந்து, அதனால் என்னுடைய நெஞ்சில் வஞ்சனை ஒழிய,
- என் உள்ளம் நீங்காது நின்று பெருங்கருணை பெருக்கெடுக்கும் பெரு வெள்ளமே!
- பாசமாகிய பற்றினை அறுக்க – வேதாத்திரியம்

”பழக்கமே பற்றாக! பாசமாக!
பரிணமித்துச் சிக்கல் வாழ்விலாச்சு.
இழக்கின்றோம் இயற்கைவள இன்மெல்லாம்.

இதையுணர்ந்து ஏற்றபடி திருந்தி வாழ்வோம்.” (ஞாக.பா.623)

ஒரு எண்ணமோ, சொல்லோ, செயலோ திரும்பச் செயலூக்கம் பெறுவது பழக்கமாகி விடுகிறது.

உடல் செல்களில் விரிவு சுருக்கமாக, மூளையில் எண்ணமாக, ஜீவகாந்தக் களத்தில் பிரதிபலிப்பாக, கருமையத்தில தரமாகவும் ஆகிவிடுகிறது.

எண்ணம்தான் சொல்லாக, செயலாக மலர்கிறது. செயலாற்றினால் விளைவும் கட்டாயம் வருகிறது. அந்த விளைவை மனித மனம் இன்பமாக துன்பமாக உணர்கிறது.

அழிந்து போகக்கூடிய உடலை மனிதன் ”நான்” என்று தவறாகக் கருதிக் கொண்ட மன மயக்கத்தால், ”தான்” என்ற அதிகாரப் பற்றிலும், தனது என்ற பொருள் பற்றிலும், மக்கள் பாசத்திலும் எல்லைகட்டி வாழத் தொடங்கிய பழக்கமானது எண்ணிலடங்காத பிறவிகளில் வித்தின்  வழியாகத் தொடர்ந்து வந்து கொண்டுள்ளது.

பழக்கமே படிப்படியாக வளர்ச்சி அடைந்து, ஒன்றிலிருந்து மற்றொன்றாக பற்றும் பாசமும் தோன்றியது.

பற்றும் பாசமும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும்.  எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஏமாற்றத்தில் முடியும்.

அதனால் மனித வாழ்வு சிக்கல்கள் நிறைந்ததாகி விட்டது. வாழ்க்கைச் சிக்கல்களில் சிக்கியுள்ள மனிதனால் இயற்கை வள இன்பத்தை யெல்லாம் அனுபவிக்க முடியாமல் இழப்பு ஆகிறது.

வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வதாகும்.

இந்தஉண்மைகளை உணர்ந்து பழக்கங்களை எல்லாம் விளக்க வழியில் ஆய்ந்து, வாழ்வின் நோக்கத்திற்கு ஏற்றபடி திருத்திக் கொண்டு வாழ்வோம்.  வாழ்க வளமுடன்.

# 14. நீராய் உருக்கி ஆருயிராய் நின்றானே

இறைவனின் பாதம் ஒன்றே கதி என்று நினைத்து அவனது சரணங்களை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, இறைவன் நிச்சயம் நற்கதியைத்தான் அருள்வான் என்பதில் சந்தேகமே இல்லை.



அப்படிப்பட்ட அந்த இறைவனின் சரணத்தைக் கெட்டியாகப் பற்ற வேண்டியது நம் கடமை; பற்றாமல் போனால் நம் மடமை என்பதே சரணாகதி தத்துவம்.

ராமருக்கு சரணா கத வத்ஸலன் அப்படின்னே ஒரு பேர் உண்டு.
ராமாயணத்தில் பால காண்டம் துவங்கி, யுத்த காண்டம் வரை இந்த சரணாகதி தத்துவத்தை ரொம்ப அழகாப் பார்க்கலாம்.

பால காண்டத்தில் தேவர்கள் பகவான் ஸ்ரீமன் நாராயணன் இடத்தில் சரணாகதி செய்கிறார்கள். அயோத்யா காண்டத்தில், பரதன் சரணாகதி மற்றும் குகனோடு ஐக்யம், ஆரண்ய காண்டத்தில், ரிஷிகள் ராமச்சந்திர மூர்த்தியிடம் சரணாகதி செய்கிறார்கள். கிஷ்கிந்தா காண்டத்தில், சுக்ரீவன் சரணாகதி. யுத்த காண்டத்தில், விபீஷணன் சரணாகதி செய்கிறார்

மாணிக்கவாசகர் இறைவனிடம் சராணகதி அடைந்து உள்ளம் உருக வேண்டுகிறார்.

பேராது நின்ற பெருங்கருணைப் போ ராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே 70

- தெவிட்டாத அமுதமே!
- அளவுகள் கடந்து நிற்கின்ற பெருமானே!
- ஆர்வம் / முயற்சி இல்லாதவர் உள்ளத்தில் வெளிப்பாடின்றி மறைந்திருக்கும் ஒளியானே!
- (என் உள்ளத்தை) நீரென உருகச்செய்து, என்னுடைய இன்னுயிராக நிற்பவனே!
- இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனே!
- உள் நிற்பவனே!

## உள்ளம் உருகி நிற்கும் நிலை – வேதாத்திரியம்

"உய்யும் வகை தேடி உள்ளம் உருகி நின்றேன்
  உயர்ஞான தீட் சையினால உள்ளொடுங்கி,
மெய்யுணர்வு என்றபெரும் பதம் அடைந்தேன்.
  மேல்நிலையில் மனம் நிலைத்து நிற்கநிற்க,
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவு அறிந்தேன்."  (ஞாக.பா.9)

வாழ்வின் நோக்கம் தெரியாமல், பிறவியின் நோக்கம் புரியாமல் தடுமாறி வாழ்ந்து வந்தேன்.

இரவும் பகலும் விடை காண சிந்தித்து உருக்கமான மனநிலையில், வாழ்வின் வகை தேடினேன்.

குருவின் மூலம் ஞானதீட்சை பெற்றதன்பின், மனம் ஒடுங்கி அறிவு என்ற நிலைக்குப் போகும் போது, உண்மை உணர்வு கிட்டியது.

மனம் விரிந்த நிலையையில் பழகப் பழக ஐம்புலன் உணர்வுகளாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்னும் ஐயுணர்வும் ஒரே உணர்வாகியதால், மன அலைச்சுழல் வேகம் குறைந்தது.

மனதின் அடித்தளம் அல்லது மனதின் மறுமுனை அறிவு என்ற நிலையை அறிந்தேன். நிலையில் அறிவாக இருப்பதே அலையில் மனமுமாக இருக்கிறது.

மனம் என்ற வகையில் செயல்படும்போது இன்ப துன்ப விளைவாக வருகிறது. மீண்டும் மீண்டும் அதே வகையில் செயல்படுகிறோம்.

மனம் கடந்தால் இன்ப துன்பம் என்ற இரட்டைகளில்லை. அது அமைதி நிலை.

அந்நிலையில் உலகியல் தே  கை ளின்பால் ஏற்பட்ட இச் செய்கைகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்ய முடிந்தது.

எது தேவை? தேவையில்லை என்ற ஆராய்ச்சியில், விளைவு துன்பம் தருமேயானால் அந்த ஆசை தேவையில்லை என்று முடிவெடுத்தபோது நிறை மனம் கிட்டியது.

அதனால் செய்யக்கூடிய செயல்களையெல்லாம் கடமைக்காக கடமை செய்தல் என்ற வகையில் செய்தபோது, மனநிறைவு, அமைதி, மகிச்சியினால் சிந்தனை தூண்டப்பெற்று மேலும் மேலும் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டியது.

இறைநிலையை குரு என்பார்கள். அந்த இறை இணைப்பால்தான் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டமுடியும்.

# 15. ஆதியனே அந்தம்

ஓர் அறிவு உயிரினங்கள் முதல் ஆறறிவு மனிதன் வரை உயிர்களுக்கு நீர் - நிலம் - காற்று - பஞ்ச பூதங்களின் கூட்டமைப்பு அவசியமாகிறது.

ஆகாயத்தில் கோடிக்கணக்கான நட்சத்திரங்களும் கோள்களும் இயங்கிக் கொண்டே இருக்கிறது.

நட்சத்திரங்கள் - கோள்கள் - பஞ்ச பூதம் - உயிரினங்கள் ஆகிய அனைத்து இயக்கமும் சக்தி களம் (Energy) என்றும், இந்த அனைத்து இயக்கத்திற்கும் மூல காரணமாக இருப்பது சுத்தவெளி ஆகும்.

நமது பூமி ஒரு சூரிய மண்டலத்தில் (Solar System) உள்ளது. கோடிக்கணக்கான சூரியனின் இயக்கமே பால்வெளி மண்டலம் (Milkyway Galaxy).

கோடிக்கணக்கான மண்டலங்கள் சேர்ந்து இயக்கமே வான்வெளி பிரபஞ்சம்.

பிரபஞ்சம் என்பது கடல் என்றால், பூமி என்பது அதில் மிதக்கும் கடுகு போல் ஆகும்.

மனிதன் உருவம் மிகவும் சிறியது. பிரபஞ்சம் மிகவும் பெரியது. இயங்குகின்ற அனைத்து இயக்கங்களும் இயக்கி கொண்டிருக்கும் சுத்த வெளியில் அடக்கம்.

"சுத்த வெளி என்பது வெட்டவெளி, சூனியம், பரலோகம், கும்மிருட்டு, ஆதி, அநாதி, பூரணம், பேராற்றல், தூயவெளி, மெய்பொருள், பரம்பொருள், பேரறிவு, முக்தி, வீடுபேரு, முழுமை பேறு, இறைநிலை, சிவம் பிரம்மம் ஆகிறது. சிவ-பிரம்மம் அணுவிலும், அண்டத்திலும், மனிதனுக்குள்ளும் இறை நிலையாக இயங்குகிறது.

“அண்டத்தில் இறைவன் பிண்டத்தில் மனிதன்"

நமது உயிர் - உடல் - மனம் - கோள்கள் - நட்சத்திரங்கள் கடந்து சென்றால் விரிவடைந்து கொண்டே இருக்கும் சுத்தவெளி.

நமது அறிவும் சுத்தவெளி. இறைநிலை, சுத்தவெளி இரண்டும் ஒரே நிலை. சுத்தவெளி மிக பெரியது. நமது உயிர் மிக மிக சிறியது.

சுத்தவெளி - சிவம் - பிரம்மம் அனைத்திருக்கும் காரணப் பொருளாக இருக்கிறது. அனைத்து கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இதுவே வீடாகிறது. இதன் பெயர் துவாத சாந்தம்.

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில் 75

- அன்பினால் தன்னைத் தொழும் அடியார்களுக்கு அன்பே உருவாயவனே!
- எல்லாமும் தானே ஆகி, எதுவும் தானாக இல்லாது இருக்கின்றவனே!
- சுடர் உருக்கொண்டவனே!
- அடர்ந்த இருளாகவும் இருப்பவனே!
  பிறப்பு என்பதே இல்லாத பெருமை உடையவனே!
- முதலாக இருப்பவனே! இறுதியாகவும் இடைப்பட்ட நிலையாகவும் ஆகி இத்தத்துவங்கள் எல்லாம் கடந்தவனே!
- (காந்தம் போல) என்னை ஈர்த்து என்னை ஆளாக – அடியவனாகக் கொண்டு அருளிய என் தந்தைக்கும் தலைவனே!
- உன்னைத் தமது கூர்மையான மெய்யறிவின் துணையாகக் உணர்கின்ற பெரியோர்களுடைய சிந்தையின்
  பார்வை வியத்தற்கு உரிய பார்வை!
- அவர்களுடைய ஆராயும் திறன் வியத்தற்கு உரிய ஆய்வுணர்வே!

ஆதியே முதலாக இருப்பது - வேதாத்திரியம்

"ஆதியே அனைத்தும்"

ஆதியின் அசைவே பரம அணு
  அவை ஒவ்வோர் அளவில் கூட
வேதங்கள் கூறும் ஐம்பூதம்
  விண்முதல் மண்வரை வேறில்லை.
ஒவ்வொரு பொருளும் பரமுதலாய்
  அவ்வுரு வரையில் வந்த கதை
செவ்விய சிறுசொல் பரிணாமம்
  சிறப்பை உணர்வாய் நீயுமதே. (ஞாக.பா.1687)

அசைவற்ற நிலையில் எங்கும் நிறைந்துள்ள சுத்தவெளியே தன்னிருக்க சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் இறைத் துகள்களாக மலர்ந்தன.

அவைகளே அதே சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் எண்ணிக்கையில் பல ஒன்றிணைந்து விண்ணாக உருப்பெற்று,

அவ்விண்களின் சேர்க்கையால் காற்று, நெருப்பு, நீர், நிலம் என பஞ்ச பூதங்களாகவும், பஞ்ச பூதங்கள் இனைந்து

பல்வேறு தோற்றப் பொருள்களாகவும், உயிர்களாகவும் மாற்றம் பெற்றன.

இப்படி ஆதியாகிய பரம்பொருள் முதல் உருவங்களாகவும் உயிர்களாகவும் வந்த சரித்திரமே பரிணாமம் ஆகும்.

(பின்னர் அருட்தந்தை தன்மாற்றம் என்று கூறுகிறார்.)
இறைநிலையின் உயர்ந்த, சிறந்த தன்மாற்றமாக உள்ள மனிதன் இந்த உன்னத சிறப்பை உணரவேண்டும்.
வாழ்க வளமுடன்.

# 16. ஆற்றின்ப வெள்ளமே

ஒரு தாய் தன் குழந்தையை ஏனையில் (தொட்டிலில்) போட்டு விட்டு கடைக்குப் போனாள்.

நடந்து போகும்போதும் சரி. கடைக்குப் போய் பொருட்களைப் பேசி வியாபாரம் வாங்கின போதும் சரி, அந்தக் குழந்தையை ம ற் ற காமலே யே எல்லா வேலைகளையும் செய்து கொண்டு இருக்கிறாள்.

அதுபோல இறைநிலையை உணர்ந்தவர்களுடைய மனமானது இறைநிலையை ஒட்டித்தான் இருக்கும் மோனமாக இருப்பது தான் அது.

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய் 80

- நீங்குவதும், புதிதாக வருவதும், கலப்பதும் இல்லாத புண்ணிய மூர்த்தியே!
- என்னைக் காக்கின்ற காவல் தெய்வமே!
- காண்பதற்கு அரியதாக ஒளி மிகுந்து இருப்பவனே!
- தொடர்ச்சியாகவும் முறையாகவும் வருகின்ற இன்ப வெள்ளமே!
- தந்தையே!
- மிகுதியாக நின்ற ஒளி வீசும் சுடரான தோற்றத்தினனாய், சொல்லப்படாத பூடகமான நுண் உணர்வாக இருப்பவனே.

"இன்ப வெள்ளமாக இருக்கும் இறையின் இன்பநிலையை எய்த வாரீர்! என அழைக்கிறது வேதாத்திரியம்.

"அறிவானது நிறை நிலையை ஆதியாக

அமைதி நிலையில் உணர்ந்து. அதுவாம் போது
அறிவு உயர்ந்தகன்று, அமைதிப் பேரின்பத்தில்
அணுமுதலாய் அண்ட கோடி தானேயாக,
அறிவே அவ்வந் நிலையில் ஒழுங்கியக்க
அமைப்பாகி. முறை பிறழாது இயங்கும் மேலாம்.
அறிவின் பெருமை உணர்ந்த இன்பவெள்ளத்து
ஆனந்தத்தில் திளைக்க வாரீர்! வாரீர்!" (ஞாக.பா.1236)

மனிதனது இருப்பாக தரமாக உள்ள அறிவானது நீடித்தும், நிலைத்ததுமான, ஆதியிலே இருந்த அமைதி நிலையை உணர வேண்டும்.

சிற்றிவு பேரறிவில் லயமாகிய நிலையில் அறிவானது உயர்வு பெற்று, விரிவு பெற்று, அந்த அமைதிப் பேரின்ப நிலையில் அணு முதல் அகன்ற பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் தானாகவே உணர்ந்து கொள்கிறது.

அறிவானது சடப்பொருட்களிலும் சீவ இனங்களிலும் அதனதன் நிலைகளுக்கேற்ப ஒழுங்காக இயங்கக்கூடிய அமைப்பும் ஆகி, வழிமுறைகள் தவறாது நடைபெறுவதையும் உணர்ந்து கொள்கிறது.

உண்மைப் பொருளே மேன்மையாக எல்லாவற்றிலும் இருந்து, இயக்கிக் காத்து, முடித்தும் வைக்கிறது என்ற உண்மைகளை உணர்ந்து, அந்த பேரின்ப வெள்ளத்தில் பேரானந்த நிலையில் மகிழ்ந்து திளைக்க வாரீர்! வாழ்க வளமுடன்

## 17. அமுது நிறைந்த இறைவா

பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்று பிரகடனம் செய்த மகாகவி பாரதி, சித்தர்களைப் போல, ஞானிகளைப் போல, சிந்தித்தது மட்டுமல்லாமல் 'சிந்துக்குத் தந்தை' என்ற பாவேந்தரின் கூற்றுக்கிணங்க பாடிப் பாடிப் பரவசப்பட்டவர் என்பதற்கும், பாட்டாலே பலரையும் பரவசப்படுத்தியவர் என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உள்ளன. அமுது ஊறும் இறைவனைப் பற்றி பாடுகிறார்.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா!

சித்தினை அசித்துடன் இணைத்தாய் – அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுலகம் அமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியமாகப்
பல பல நல்லழகுகள் சமைத்தாய்

முக்தியென்றறொரு நிலை சமைத்தாய் – அங்கு
முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்
பக்தியென்றொரு நிலை வகுத்தாய் – எங்கள்
பரமா பரமா பரமா!

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று 85

- இவ்வுலகில் பல்வேறு விதங்களில் கூறப்பட்டு, மெய்யறிவாக ஆகும் (ஆய்வின் இறுதியில் சாறாகத் தேறும்) தேற்றமே!
- அந்தத் தேற்றத்தின் பயனான தெளிவே!
- என்னுடைய சிந்தனையினுள் உண்பதற்கு மிகவும் அரியதும் விரும்பத்தக்கதும் ஆன அமுத ஊற்றே!
- என்னை உடைமையாக ஆள்பவனே!
- பலவேறு விகாரங்களை உடைய ஊனால் (சதையால்) ஆன இவ்வுடம்பின் உள்ளே கட்டுண்டு கிடக்க இயலவில்லை, எம் தலைவா!
- அரனே!
- ஓ! என்று பலவாறு . . . .

## அமுத ஊற்றா? இன்ப ஊற்றா? வேதாத்திரியம்

”இன்ப ஊற்று என நிறைந்த இறைவா” எனும் போதிலே
ஏற்படும் ஓர் இன்பமதை எவ்வாறு சொல்வேன்?
நன்மை தரும் நவகோள்கள், நட்சத்திரக் கூட்டம்,
நான் அகத்தே காணுகின்றேன் நடமாடும் காட்சியாய்!
உன் பெரிய, பேரியக்க, உவமையற்ற ஆற்றலால்,
உலகங்கள் அத்தனையும் உருளுதே ஓர் கொத்துபோல்!
தனமயமாய்த் தான் அதுவாய்த் தவறிடாதியக்கும் உன்
தன்மையினை எண்ண எண்ண, தவமது ஆனந்தமே” (ஞாக.பா.1652)

பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்து எல்லா இயக்கங்களையும் திருவிளையாடலாக நிகழ்த்திக் கொண்டிருக்கும் வியத்தகு மறைபொருள் காந்தம்.

அந்தக் காந்தத்திற்கும் உட்பொருளாக இருப்பு நிலையாக அமர்ந்து, காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற ஆறு விளைவுகளாகி.....

உயிர்களுக்கெல்லாம் வாழ்க்கை இன்பத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் உன்னை "இன்ப ஊற்று என நிறைந்த இறைவா" என்னும்போது ஏற்படுகிற எனது இன்பப் பெருக்கை எவ்வாறு வார்த்தைகளால் சொல்வேன்?

விண் துகள்களின் கூட்டாக பஞ்சபூதங்கள் இருந்தாலும், விண், வெளி என்ற இரண்டின் விகிதாசாரக் கூட்டுக்கேற்ப ஒவ்வொரு பௌதீகப் பிரிவும் காந்த அலையின் தன்மையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப காந்தத் தன்மாற்றத்தின் அளவும் விளைவுகளும் ஒவ்வொரு பௌதீகப் பிரிவிற்கும் வேறுபடுகிறது.

இதற்கு பௌதீகப் பிரவுகளைக் கூட்டாகப் பெற்று, சூரியனைச் சுற்றி இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது கோள்களும் நில உலகில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு எல்லாம் வாழ்வின் இன்பத்திற்கு வேண்டிய அலைகளை ஓயாமல் வீசி நன்மை அளிக்கின்றன.

இந்த ஒன்பது கோள்களையும் நட்சத்திரங்களாக சூரியன்களாகக் காண்கின்றபோது எனது உள்ளம் அவைகள் எல்லாம் நியதி தவறாமல் ஆடும் நடனக்காட்சியைப் போன்று உவப்பை அளிக்கிறது.

இறைவா நீயே உனது துண்டுபட்ட பக்தி நிலையில், பேரியக்க மண்டலத்தில் இயங்கும் பொருட்கள் எல்லாமாக இருப்பதால், உனது தன்மை அனைத்தும் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ளதால் நீயே எல்லாவற்றையும் நியதி தவறாமல் இயக்கி வருகிறாய்.

இந்தஉண்மைகளை உணர்ந்து, அதில் லயமாகின்ற மனநிலையே எனக்கு உயர்ந்த தவமாக அமைகின்றது.

# 18.மாயையும் ஞானமும்

ஒருநாள் ஒரு பெண்மணிக்கு தூக்கத்தில் கனவு வந்தது.

அந்தக் கனவில் ஆஜானுபாகுவான ஆள் ஒருவன் அப்படியே அந்த அம்மாவைத் தீவிரமாகப் பார்த்தவாறே நெருங்கி நெருங்கி வந்து விட்டான்.

அந்தப் பெண்மணி நடுங்கும் குரலில், "என்னை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் "இது உன் கனவுதானே, நீதானே தீர்மானிக்க வேண்டும்?" என்றான்.

எனவே மாயை என்பது நீங்கள் உருவாக்கிக் கொள்வது. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

மாயை என்பது என் உருவாக்கம் என்பது புரிந்து விட்டால் அதற்குப் பெயர் ஞானம். அது புரியாமல் அதுவே உண்மை என்று நினைத்தால் அது அஞ்ஞானம் அல்லது மாயை.

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே 90

- போற்றுதல்கள் செய்து, புகழ் கூறித் தம்முடைய பொய்கள் ஒழிய உண்மையே ஆன அடியவர்கள் மீண்டும் இவ்வுலகுக்கு வந்து வினை நிறைந்த பிறவியில் சிக்குறாது மாயையால் ஆன இவ்வுடலின் கட்டுமானத்தை அழிக்க வல்லானே!
- வேறு எதுவுமற்றதாகிய இருளில் கூத்து ஆடுகின்ற நாதனே!
- தில்லை என்னும் சிதம்பரத்தில் ஆடுபவனே!
- தென்பாண்டி நாட்டை உடையவனே!

மாயையால் ஆன கட்டுமானத்தை உடைத்து ஞானம் பெற வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

”மாயையும் ஞானமும்”

”உருவத்தின் முன்தொடர்போ வித்தின் மூலம்,
 உயர் அறிவிற்கோ மூலம் உருவமாகும்.
பருவத்திற் கேற்றபடி உணர்ச்சியூடே,
 பல தொழில்கள் ஆற்றும்மதி வேகம்கூட,
அருவத்தில் வியாபித்தாம் அகண்டாகாரம்
 அந்நிலையில் அனுபவமாம். இவ்விரண்டில்
மருவித் தான்பெற்ற பலத்துக் கேற்ப,
 மறப்பதும் பின் நினைப்பதுமே மாயை-ஞானம்” (ஞாக.பா.1362)

மனிதன் தற்போதை உருவம் உடலாக வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. முன் தொடரான பெற்றோர்களின் வித்தின் மூலம் உடல் கட்டப்பட்டுள்ளது.

ஆனால் மனித அறிவோ பெற்றோர்களின் உருவம் தான் மூலம் எனக் கருதுகிறது. இந்நிலை உண்மைக்கு மாறானது ஆகும்.

இறைநிலையின் தன்மாற்ற சரித்திரம் தான் மனிதனின் கதையும் கூட, இதுவே மாயை அல்லது அறிவின் மயக்க நிலை எனப்படும்.

உடலும் அறிவும் வளர்ச்சியடைகிறது. குழந்தைப்பருவம், இளமைப் பருவம், முதுமைப்பருவம் என்ற பருவ மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டேயுள்ளது.

பருவ நிலைகளுக்கேற்ப பல செயல்கள் உணர்ச்சி என்ற வகையில் அறிவு செயல்படுத்தும் அறிவின் வேகமானது கூடி விரிவடைகிற போது, தனது மூலமாகிய அரூபத்தில் விரிந்து அகண்டாகார அனுபவம் கிட்டும்.

உணர்ச்சி நிலையில் உடல் அளவில் அறிவு இயங்குவதும், உணர்வு நிலையில் அகண்டாகாரமாக விரிவடைவதுமான இரண்டு நிலைகளில் பெறும் பலத்திற்கு ஏற்ப உண்மை உணர்வை மறப்பதும் பின்னர் நினைப்பதுமே ஞானமுமாகும்.

உண்மையை நினைப்பது ஞானம், மறப்பது மாயை ஆகும்....என்பது வேதாத்திரியம்.

உயிர்களின் தோற்றமே மாயை எனும், பிம்பங்களால் ஆனது; இதில், அனைத்தையும் அறிந்து விட்டோம் என்று நமக்குள் எழும் ஆணவம் கூட, மாயை தான் என்பதை, அறிந்து தெளிய வேண்டும்.

அனைத்தும் மாயையின் சொரூபம் என்பது தெரிந்து விட்டால், நம்மிடம் இருக்கும், ஆணவம், கோபம், வெறுப்பு, விரோதம், கயமை அத்தனையும் மறைந்து, சக மனிதரை நேசிக்கும் பண்பு நமக்குள் ஏற்படும். மாயை வென்று நாமும் ஆனந்தமாக வாழ்வோமாக!

## 19.பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த

பிறவிக்கடல் நீந்துதல் என்ற பெரிய காரணத்திற்காக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நான் எங்கிருந்து எவ்வாறு இவ்வுடலுடன் கூடிய சீவனாக ஏன் வந்தேன் என்ற உண்மைகள் அறியும் வரையில் வான் கவர்ச்சி கிடப்பது.

பூ கவர்ச்சியில் தான் சிக்கி ஆன்மா தவித்துக் கொண்டிருக்கும். தவத்தாலும், தத்துவ விளக்கத்தாலும் பரம் பொருளுணர்வு பெற்று சீவனைப் பரத்தோடு அறிவின் முழுமையில் ஐக்கியப்படுத்தும் வரைக்கும் பிறவி நீடித்துக்கொண்டு போகும்.

உண்மையிலேயே பிறவிக்கடலை நீந்தி, பரம்பொருளோடு கலப்புற்று உய்ய வேண்டுமென ஆர்வம் உடையோர் மெய்விளக்கத் தவமன்றத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 95

- அல்லல் நிறைந்த பிறவியை நீக்குவானே!
- ஓ! என்று
  சொல்லிற்கு அரிய பெருமானைக் அழைத்து,
- (இறைவன்) திருவடியை பணிந்து
- அதன் கீழிருந்து
  சொல்லிய இப்பாடலின் பொருளினை உணர்ந்து
  சொல்லுபவர்கள்
- சிவபுரத்தில் இருக்கும் சிவபெருமானின் திருவடி நிழலுக்குச் செல்வார்கள்,
- பலராலும் புகழப்பட்டும், தொழப்பட்டும்.

"அல்லல் நிறைந்த பிறவியை எப்படி நீக்குவது?

பிறப்பு இறப்பு இரண்டையும் வேரொடு அறுக்க என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி காட்டுகிறது.

பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த வென்றால்,
பெருவிழிப்பாய் இருவழியில் வெற்றிவேண்டும்.
பிறப்புஎழாமல் புதிதாய்க் கருவின் மூலம்
பேணிப் பாலுறவு அறவே தடுக்க வேண்டும்.
பிறப்பதனைப் பெருக்குகின்ற தன்முனைப்பு,

பெரும்பாவப் பதிவுகளும் பற்றும் போக்கி,
பிறப்பறுக்கும் அகத்தவமும் அறமும் ஆற்றி,
பேரறிவாய் அறிவறிந்து நிலைக்க வேண்டும்." (ஞாக.பா.1314)

ஒரு மனிதன் பெற்றோர் விந்து நாதத்தில் உள்ள தரத்தை சஞ்சித கர்ம வினையாகப் பெற்று. அந்தத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு உடலை, மனதை இயக்கி பிராரப்த கர்ம வினையை சேர்த்துக் கொள்கிறான்.

அதுவே அவனது ஆன்மாவில், அறிவின் தரமாகியது. ஆன்மக் களங்கங்கள் தூய்மை பெறும் வரை பிறப்பு இறப்பும் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும்.

கடலுக்கு எல்லையைக் காண முடியாதது போல் பிறப்பு இறப்புத் தொடருக்கும் எல்லை இல்லை.

பிறப்பு இறப்பு என்னும் வாழ்க்கைக் கடலைக் கடந்து பிறவியின் நோக்கமாகிய இறையனுபூதி நிலை கிட்ட வேண்டுமானால், இரு வகைகளில் விழிப்பு நிலையில் செயல்பட்டால் வெற்றி கிட்டும்.

களங்கமான பின்பிறவிகளை உருவாக்கும் ஆண் பெண் பாலுறவை அறவே தடுத்து புதிதாக் கருவின் மூலம் பிறப்பு ஏற்படாமல் காத்துக் கொள்வது ஒன்று.

மனிதனின் தன் முனைப்பால் வரும் பாவப் பதிவுகளும், உலகியல் பற்றும் ஆன்மாவைக் களங்கப்படுத்தி பிறப்பைப் பெருக்குகின்றது.

அதனைத் தவிர்ப்பதற்கு அகத்தவத்தின் மூலம் மனதை உயிரில் அடக்கியும் ஒடுக்கியும் அறிவை அறிந்து, அறநெறியில் வாழ்ந்து பேரறிவு நிலையில் நிலைப்பது மற்றொன்று ஆகும்.

நாமும் பிறப்பற்ற நிலை பெறுமாறு ஆனந்தமாக வாழ்வோமாக!

## துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.

5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ்,
வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி
பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி
பானுகுமார்.
8. பாரதியார் பாடல்கள், பாரதியார்
9. சுகவாரியும் பேரின்ப ஊற்றும், மன்னார்குடி பானுகுமார்.
இணையதளம்
10. ஆனந்த களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம்,
சென்னை.